## சார்பு நீதிமன்றம், செஞ்சி

**அ.வ.எண்.168/2022** **நாள்.28.04.2025**

2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | தொழில் | |
| த.பெ/க.பெ. | பழனி | சாதி | |
| கிராமம் | கொடுக்கன்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 51 |

**வா.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் பிரதிவாதியிடமிருந்து 2 பத்திரங்களில் கையொப்பம் பெற்று பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நீங்கள் ரூ.20000க்கு மேல் கடன் கொடுத்தால் கடன் பத்திரத்தில் எழுதிவாங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. கொடுக்கன்குப்பம் கிராமத்தில் நிலத்திற்கு மதிப்பு அதிகம் என்றால் சரிதான். பதிவு அலுவலகத்திற்கு என்னுடன், கலைச்செல்வன், ரூபலிங்கம் ஆகியோர் வந்தார்கள். இரண்டு பத்திரங்களும் 22.01.2020ல் ஒரு பத்திரம், 03.02.2020ல் ஒரு பத்திரமும் பதிவு செய்யப்பட்டது. 22.01.2020ல் பதிவு செய்த பத்திரத்தில் எவ்வளவு தொகை குறிப்பிட்டு எழுதப்பட்டது என்றால் ரூ.25,000 கிரையம் பேசப்பட்டு அன்றைய தேதியில் ரூ.20,000 கிரைய முன்தொகை செலுத்தினேன். 03.02.2020ல் பதிவு செய்த பத்திரத்தில் எவ்வளவு தொகை குறிப்பிட்டு எழுதப்பட்டது என்றால் ரூ.1,65,000 கிரையம் பேசப்பட்டு ரூ.1,60,000 கிரைய முன்தொகை செலுத்தினேன். 22.01.2020ல் பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரத்திலுள்ள சொத்தின் விஸ்தீரணம் 17 செண்ட் ஆகும்.

இரண்டாவதாக போடப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் சொத்தின் விஸ்தீரணம் 1.50 செண்ட் ஆகும். கொடுக்கன்குப்பம் கிராமம் மேல்மலையனூருக்கு அருகாமையில் உள்ளது என்றால் சரிதான். மேல்மலையனூர் அருகாமையில் உள்ள இடங்களின் சந்தை மதிப்பு அதிகம் என்றால் சரிதான். அதனால் லோகநாதன் உங்களிடம் கிரைய ஒப்பந்தம் போட்டதாக கூறுவது பொய் என்றாலும், அடமானத்திற்காகத்தான் அவ்வாறு எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்தரத்தில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் யார் என்றால் கலைச்செல்வன், ரூபலிங்கம் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்தனர். 2 பத்திரத்திலும் சாட்சி கையொப்பம் அவர்கள் தான் செய்தனர். நான், கலைச்செல்வன், ரூபலிங்கம் ஆகியோர் நண்பர்கள் என்றால் இல்லை பிரதிவாதிக்கு தான் அவர்கள் இருவரும் பங்காளிகள். பிரதிவாதியிடம் இந்த 2 பத்திரங்கள் தவிர வேறு எதிலும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அப்படி வாங்கியிருந்தால் செல்லக்கூடியதல்ல என்று சொன்னால் சரிதான்.

புரோநோட்டு எதிலும் பிரதிவாதியிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். கொடுக்கன்குப்பம் கிராமத்தில் நீங்கள் வசதியானவர் என்றால் சரியல்ல. நீங்கள் மளிகை கடை வைத்துள்ளீர்களா என்றால் தேங்காய் கடை, பெட்டி கடை வைத்துள்ளேன். நீங்கள் ஊரில் வசதிபடைத்தவர் என்பதால் லோகநாதனை அடியாட்களை வைத்து மிரட்டி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. அடமான பத்தரத்தில் தான் பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், கடனை பைசல் செய்துவிட்டதால் பத்திரத்தை ரத்து செய்யும்படி உங்களிடம் பிரதிவாதி கேட்டபோது தான் அடமான பத்திரத்திற்கு பதிலாக கிரைய ஒப்பந்த பத்தரம் ஜோடித்துகொண்ட விவரம் பிரதிவாதிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல.

பிரதிவாதி அடமான கடன் பத்தரத்திலுள்ள கடன் தொகையை திருப்பி அளித்துவிட்டார் என்றாலும், நீங்கள் ஜோடித்துகொண்டு பொய்யான முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 17 செண்டின் பட்டா எண் 473 1 ஏக்கர் 50 செண்ட் சொத்தின் பட்டா எண் 180 ஆகும். மேற்படி சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். மேற்படி சொத்தின் மதிப்பு அதிகம் என்றாலும், அதனை எமாற்றி வாங்கவேண்டும் என்பதற்காக அடமான பத்திரம் போடுவதற்கு பதிலாக கிரைய ஒப்பந்த பத்திரம் ஜோடித்துகொண்டீர்கள் என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).